# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

Vol - 23 | JULY ஜூலை | 2022

ஆண்டு சந்தா ரூ. 100/- | தனிப் பிரதி ரூ. 10/- | வெளிநாட்டு சந்தா ரூ. 600/-


# ...உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக...

மத்தேயு 19:19




கௌரவ ஆசிரியர் BETTY CHOATE    ஆசிரியர் பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 10 |
| சிறுவர் பகுதி | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
**R. ஆண்டனி ராஜா**, D.Th.,M.B.A (Bible Studies)
**Dr. V.S. இம்மானுவேல்**, M.Sc., D.D., **C. கியாமிலஸ் கார்த்திக்**, B.Sc.,
**P. பேபி ராஜா** D.Th., **E. ஜோசப் பிரதீப்** B.Th.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் B. கருப்பசாமி பாண்டியன் B.A., B.L
அட்வகேட் V. சுப்பிரமணியன் M.A., B.L


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3:30 மணி**

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7:00 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன்ராஜா**, M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா**, M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**OUR ENGLISH TV PROGRAM**

**SALVATION TV**

**Every Sundays 2pm**

**Speakers:**
**Jerry Bates & Kingsly Rajah**





**கிருபையுள்ள வார்த்தை புதிய வெளியீடு**

**கிருபையின் கீதங்கள்**

**விபரங்களுக்கு :**

**92 4421 4421, 92 4431 4431**


**பாடல் புத்தகம்**

**421** பக்கங்கள்
**514** தமிழ் பாடல்கள்
**29** ஆங்கில பாடல்கள்
**100** சிறுவர் பாடல்களுடன்

**கிருபையுள்ள வார்த்தை**

**கிறிஸ்துவின் அன்பை விதைக்க தூண்டும் விண்ணக பிதாவின் வார்த்தை.**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth International**

# வெறுப்பும், கசப்பும் வேண்டாமே!

ஆசிரியர் உரை
P.C. பிலேமோன் ராஜா



அன்பானவர்களே! கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் அன்புள்ள ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் எனது வாழ்த்துக்கள். இந்த இதழை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்காகவும் பாரத்தோடு ஜெபிக்கின்றேன்.

இந்த மாதம் நாம் வெறுப்புணர்வு மற்றும் கசப்புணர்வினை குறித்து வேத தியானம் செய்வோம்.

## வெறுப்பு என்பது என்ன?

**ரோமர் 7:15** "எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்."

வெறுப்பு என்பது ஒரு உணர்ச்சி (Emotional), அது வளரும்போது, நாளடைவில் கசப்புணர்வு என்ற பண்பாக உருப்பெரும். அதின் அடுத்த படிநிலை எரிச்சலுள்ளவர்களாய், எதின் மேலும் நாட்டமற்றவர்களாகப், சுய பச்சதாபத்துடன், தன்னைத் தானே ஞானியென்றும், தான் மாத்திரம் சரியென்றும் எண்ணும் சுயநீதியுள்ளவர்களாக நம்மை உருமாற்றத்தக்கதாக வலிமையுள்ள ஒரு உணர்ச்சியாகும்.

**எண் 21:5** 'ஜனங்கள்தே தவனுக்கும்மே மாசேக்கும் விரோதமாகப் பேசி; நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள்எ ங்களைஎ கிப்துதே தசத்திலிருந்துவ ரப் பண்ணினதென்ன?இ ங்கேஅ ப்பமும்இ ல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்குவெ றுப்பாகியிருக்கிறதுஎ ன்றார்கள். வெறுப்பு என்பது, சத்துருவானவன் நம்மை எளிதில் வீழ்த்த, நமக்கு எதிரே எடுக்கும் வலிமையான ஒரு தீமையின் ஆயுதமாகும். நாம் அனைவரும் எளிதில் வீழ்ந்துவிடக்கூடிய ஒரு பாவம் அது.

பொய், திருட்டு, விபச்சாரம், விக்கிரகாராதனை போன்ற பாவங்களை செய்யும்படி, நம்மை தூண்ட சத்துருவானவன் பெரிதாக மெனக்கிட வேண்டும். ஆனால் வெறுப்பு என்பது ரொம்ப எளிதாக நம்மை வீழ்த்திவிட அவனது தந்திர ஆயுதமாக இருக்கின்றது. கோபம்கூட சில நாழிகைகள் வர தாமதிக்கலாம், ஆனால் வெறுப்பு உடனே வந்துவிடும். கோபம் வருவது கூட யாரோ ஒருவர் பேசினது, செய்தது அல்லது ஏதோ ஒன்றின் மீது நமக்கு ஏற்படும் வெறுப்புணர்வின் வெளிப்பாடாக இருக்கின்றது.

இதில் என்ன கொடுமையென்றால், சத்துருவானவன் நம்மை வீழ்த்த இந்த தீமையின் ஆயுதத்தினை நம் கையிலே கொடுத்துவிடுவான். நம்மை நாமே தான் பாவத்தில் விழத்தள்ளுகின்றோம் என அறியாமல் எளிதில் வெறுப்படைகின்றோம். ஆகையால் சற்று நிதானித்து யோசித்துப்பார்ப்போம்.

## வெறுப்பு என்ன செய்யும்?

**எண் 23:8** "தேவன்ச பிக்காதவனைந ான் சபிப்பதெப்படி?க ர்த்தர்வெ றுக்காதவனைந ான் வெறுப்பதெப்படி?"

அன்பு என்பது நல்லதாயினும் அதனை நாம் யார் மீது, எதன் மீது வைத்திருக்கின்றோம் என்பதனை பொறுத்து விளைவுகள் அமைவது போல, வெறுப்பு என்பது ஒரு உணர்ச்சியாயினும் அதனை நாம் எதற்கு பயன்படுத்துகின்றோம் என்பதனை பொறுத்து அதின் விளைவுகள் இருக்கும்.

வெறுப்பும் கசப்பும் என்பது ஒரு உணர்ச்சி; இது என்ன தப்பாகிவிட போகின்றது என யோசிக்கலாம். வெறுப்பும் கசப்பும் நல்ல உணர்ச்சி அல்ல, காம விகாரத்தினை போல மோசமான உணர்ச்சி, ஏன்? அதைவிட இன்னும் கொடிய குணம் என்றே சொல்லலாம். நம்மில் சிலர் எனக்கு வரும் வெறுப்பும் கசப்பும் என்ன பெரிதாக செய்துவிட போகின்றது (அது என்ன பெரிய பாதிப்பை ஏற்படுத்த போகின்றது). எனக்கு ஒன்றும் அப்படி தெரியவில்லை என நாம் யோசிக்கலாம். இன்னும் சிலர், எனக்கு வெறுப்பு

வந்தால், நான் அமைதியாக இருப்போன். நான் உண்டு என் வேலை உண்டு. யார் மீதும் வெறுப்போ, அவர்களிடம் பேச மாட்டேன் அவர்களை கண்டுக்க மாட்டேன் நான் என் வேலையை பார்க்கின்றேன், அவர்கள் அவர்களுடைய வேலையை பார்க்கட்டும், இதெல்லாம், நமக்கு ஒத்துவராது என ஒதுங்கி விடுவேன் அது நல்லது தானே! அது நல்லதாக தானே இருந்திருக்கின்றது என நாம் எண்ணலாம்.

நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும், இந்த சிந்தனைகள் இது போன்ற சிந்தனைகள் எல்லாம் தேவ அன்பிற்கு முற்றிலும் எதிரானதே. ஏனெனில் வெறுப்பு என்பது தேவ அன்பு உண்டாக்கும் விளைவுகளிற்கு எதிரான விளைவுகளை உண்டாக்குவதாக இருக்கின்றது. இறை அன்பு ஒருவருக்குள் இருந்தால் அது உண்டாக்கும் விளைவுகளிற்கு, எதிரான விளைவுகளை வெறுப்பும் கசப்பும் உண்டாக்கும் என்பது நிச்சயம். ஏனெனில் அது தேவ அன்பிற்கு முற்றிலும் எதிரான ஒரு குணமாகும்.

வெறுப்பும் கசப்பும் வந்தால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றோ, நான் என்ன செய்கின்றேன் என்றோ சொல்வதைவிட, வெறுப்பின் ஆவியால் பிடிபட்டவர்கள், அதாவது வெறுப்பிற்கு தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் என்ன செய்தார்கள் என வேதாகமத்திலிருந்தே படிப்போம்.

## காயீனின் வெறுப்பு

இந்த உலகத்தின் முதல் கர்ப்பபிறப்பு மனிதனான காயீன், தன் சகோதரனை குறித்த வெறுப்பு வந்த பிறகு, முகநாடி மாறுபட்டது. அவனது வெறுப்பு, அவளது முகத்தில் தெரிந்து, கர்த்தர் அவனை கண்டித்தார். அதனையும் மீறி, தன் உடன்பிறந்தவனை இரக்கமற்று கொலை செய்தான் அந்த கொலையை மறைக்க, எல்லாம் அறிந்த சர்வஞானியாகிய கர்த்தரிடமே நாடகமாடினான் **(ஆதியாகமம் 4)**.

## நோவாவின் வெறுப்பு

ஏறக்குறைய 4500 ஆண்டுகளுக்கு முன்பாக, இந்த முழு உலகமும் கர்த்தருக்கு எதிராக இருந்த போதும், ஒத்த ஆளாக கர்த்தருக்கு பயந்து, தீமையான பாவங்களுக்கு தன்னை விலக்கி, உத்தமனாகவும் நீதிமானாகவும், ஏறக்குறைய நூறு ஆண்டுகள் முரட்டுத்தனமான மக்களுக்கு பொறுமை மற்றும் அன்புடனே நீதியை போதித்து, கர்த்தருடைய மனம் குளிரும்படி வாழ்ந்த முன்னோடியான நோவா, மதுபோதையில் மயங்கி ஆடை விலகி கிடந்ததை தன் மகன் கானான் தன் மற்ற மகன்களுக்கு அறிவித்ததினால், வெறுப்படைந்து, தான் பெற்ற பிள்ளையை சபித்தான் **(ஆதியாகமம் 9)**.

## யாக்கோபின் பிள்ளைகளின் வெறுப்பு

யாக்கோபின் 10 பிள்ளைகளும் தங்கள் தம்பியாகிய யோசேப்பினை கிணற்றில் தூக்கி எறிந்தனர். அதில் தங்களுக்கு ஆதாயம் இல்லையென்று ஊர் பேர் தெரியாதவர்களிடம் அடிமையாக விற்றனர். அங்கே போய் யோசேப்பு சோற்றுக்கு வழியின்றி, அடிபட்டு உதைபட்டு, அவனுக்கு தன் வாழ்வே கசப்பாகி, கொடுமையான மரணத்தினை சந்திக்க வேண்டும் என எண்ணினரோ, என்னவோ? உண்மையில் அடிமையாக வாழ்வது கொடுமைதான் அல்லவா! தகப்பனின் செல்லப்பிள்ளையாகிய சுதந்தரவாளி ஒருவன், நாதியற்று, அனாதையாக வாழ்வது என்பது எவ்வளவு பெரிய கொடுமையாக இருக்கும். ஏன் இப்படிப்பட்ட வாழ்வை அவனுக்கு தர விழைந்தனர். தம்பியின் மீதுகொண்ட வெறுப்பு **(ஆதியாகமம் 37)**. தங்கள் தகப்பனை பொய் சொல்லி ஏமாற்றி, அவரது வாழ்வை துயரத்தில் ஆழ்த்தினர். விளைவுகளைப்பற்றி யோசிக்காமல் செயல்பட்டனர். இதேபோன்று நிறைய உதாரணங்களை வேதாகமத்திலிருந்தே சொல்லிக்கொண்டே போகலாம்.

## யூதர்களின் வெறுப்பு

**யோவான் 1:11** "அவர்த மக்குச்சி சாந்தமானதிலே வந்தார்,அ வருக்குச்சி சாந்தமானவர்களோஅ வரை ஏற்றுக்கொள்ளவில்லை."

யூதர்கள், ஆண்டவர் இயேசுவின் மீது வெறுப்புக் கொண்டனர். கர்த்தருடைய வார்த்தையின்படி வைராக்கியமாக வாழ்வதாக எண்ணிக்கொண்டே, கர்த்தருடைய வார்த்தையின் வடிவாகிய இயேசு கிறிஸ்துவை அவர்கள் வெறுத்து புறக்கணித்தனர். அவர் தீர்க்கதரிசனங்களின்படியே மேசியாவாக இருந்தும், அவர்கள் விரும்பினபடி, எதிர்பார்த்த ராஜாவாக இல்லாததினால் புறந்தள்ளினர். அவர்கள் வெறுப்பினால் செய்தவைகளை நாம் உற்றுக் கவனித்தால், இது வெறுப்பின் உச்சமாக இருக்கின்றது என புரிந்துகொள்ள முடியும். கர்த்தருடைய வார்த்தையின்படி வாழ அனுதினமும் முயலுகின்ற நமக்கு மாபெரும் எச்சரிப்பின் செய்தியாகவும் இருக்கின்றது.

இயேசுவின் மேல் கொண்ட வெறுப்புணர்வு, அவர்களை என்ன செய்ய தூண்டியது? அதாவது, இயேசுவின் மீது கொண்ட வெறுப்பினால் என்னவெல்லாம் செய்தனர்? அந்த தீய குணத்தின் செல்வாக்கின் விபரீதங்கள் என்னென்ன?

**மத்தேயு 27:11–26**

- அவர்களுக்கு, சத்தியத்தினை காது கொடுத்து கேட்க மனதில்லை.
- சத்தியத்தினை அறிந்துகொள்ள மனதில்லை.
- உண்மை எது பொய் எது அறிய விரும்பவில்லை.
- நல்லது எது கெட்டது எது என பகுத்துப்பார்க்க நிதானிக்கவில்லை.

**மத்தேயு 27:11–14**

- பொய் சொன்னார்கள் மற்றும் பொய் சொல்லச் சொன்னார்கள்.

**மத்தேயு 27:12–14**

- நீதிமானை கொலை செய்ய துணிந்தனர்.
- அதற்காக கூக்குரல் இட்டனர் மற்றும் கலகம் செய்தனர்.

**மத்தேயு 27:15–21**

- நன்மையை புறந்தள்ளி தீமையை தேர்வு செய்தனர்.

**மத்தேயு 27:24–26**

- தங்களுக்கும் தங்கள் பிள்ளைகளுக்கும் சாபங்களை வாங்கி குவித்தனர்.

**மத்தேயு 27:27–32**

- தாங்கள் செய்வதே சரி என மிதப்பில் ஆணவமும் அகங்காரமும் கொண்டனர்.

**மத்தேயு 27:33–39**

- இரக்கமற்றவர்களிடம் மற்றும் வெற்றி பெற்றதாக எண்ணி தோற்றுப் போயினர்.

**மத்தேயு 27:39–44**

- அவதூறு ஏளனம், தூஷணம், நிந்தனை செய்தனர்.

**மத்தேயு 27:62–28:10**

- தாங்கள் வெறுப்பின் செயலை நியாயம் செய்ய, தங்கள் பொய்யை உண்மையாக்க விளைந்தனர்.

### சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1. A. **ஹானா ஜோதி** – மதுரை
2. M. **ஜோனாத்தான்** – கரூர்
3. M. **ராஜா** – கரூர்
4. **டேஃப்னி ஜுனித்தா** – சென்னை
5. A. **கார்பஸ் பிலேமோன்** – மதுரை
6. S. **லக்ஷிதா** – கரூர்
7. S. **கனிஸ்கா** – கரூர்

**மத்தேயு 28:11-15**

மனந்திரும்ப மனமின்றி தங்கள் பாவத்திலே நிலை கொண்டு, நரகத்தின் மக்களாயினர்.

அவர்களை ஆண்டவர் இயேசு நேசித்தார். அவர்கள் தேவனுடைய கோபாக்கினையிலிருந்து தப்பும்படி, அவர்களுக்காக வேண்டுதலும் செய்தார். காரணம், ஆண்டவர் அவர்களது பாவ செயல்களை தான் வெறுத்தாரே தவிர அவர்களை அல்ல **(லூக்கா 23:34)**.

## வெறுப்புணர்வினை என்ன செய்ய வேண்டும்?

**எபேசியர் 4:31** "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்றெந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது."

முதலாவதாக, இந்த வெறுப்புணர்வினை நாம் நம்மை விட்டு நீக்க வேண்டும். வெறுப்புணர்வு என்பது தன்னை நியாயப்படுத்திக்கொண்டே தவறான பாதையில் அழிவை நோக்கி நம்மை மெல்ல மெல்ல கூட்டிச் செல்லும் சத்துருவின் எளிமையான அதே வேளையில் வலிமையான கூரிய ஆயுதம். ஆகையால் வெறுப்பை வெறுத்து தள்ளுவோம், நம்மை விட்டு என் ஆண்டவர் இயேசுவைபோல யாரையும் வெறுக்க மாட்டேன், யார் மீதும் கசப்புக்கொள்ள மாட்டேன் எல்லாரிடத்திலும் தேவ அன்பினை வெளிப் படுத்துவேன். எல்லோருக்கும் தேவ அன்பினை கொடுப்பேன் என தீர்மானம் செய்வோம். ஏனெனில் அதற்காக தான் ஆவியானவர் தேவ அன்பினை நம் இருதயம் என்னும் பாத்திரத்தில் ஊற்றி நிரப்பி வைத்துள்ளார் **(ரோமர் 5:5)**. ஆகையால் சத்துருவானவனின் வெறுப்பும் மற்றும் கசப்பினை வேரறுத்து, தேவ அன்பில் வேரூண்டுவோம்.

**நீதி 8:13** "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்."

அடுத்ததாக, சத்துரு நமக்கு எதிரே கொண்டு வரும் இந்த வெறுப்புணர்வு என்னும் ஆயுதத்தினை கொண்டு, அவனையே நாம் வீழ்த்த வேண்டும் அதாவது அவனுக்கு எதிராக திருப்ப வேண்டும். கோலியாத்தின் பட்டயத்தினை உருவி, அவனை சிரச்சேதம் செய்த தாவீதை போல, நாமும் செயல்பட வேண்டும்.

இந்த வெறுப்புணர்வினை சுயத்தினை வெறுப்பதற்காகவும், **மத்தேயு 16:24** "அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப்பின்பற்றக்கடவன்.'' பாவத்தினை வெறுப்பதற்காகவும், **ரோம-12:9** "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக, தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக்கொண்டிருங்கள். மற்றும் உலகத்தினை வெறுப்பதற்காகவும் **தீத்-2:12** "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி," நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும். அவ்வாறு நாம் செய்யும் போது இந்த வெறுப்புணர்வினை மேற்கொண்டு, கர்த்தருக்கு உகந்தவர்களாக மாற முடியும்.

இறுதியாக,

அன்பானவர்களே, வெறுப்புணர்வு மற்றும் கசப்புணர்வு என்பது முற்றிலும் அன்பிற்கு எதிரான குணம். ஆகையால், நாம் ஆண்டவர் இயேசுவை போல, பாவ செயல்களை வெறுப்போம். பாவிகளை நேசிப்போம். பாவிகளை வெறுத்தால், அவர்களுக்கு நற்செய்தியை சொல்வதினை நிறுத்திவிடுவோம். எல்லாரும் இரட்சிக்கபட வேண்டும் என்ற தேவ திட்டம் உடைபட நாமே காரணமாகிவிடுவோம். அதனால் இதனை குறித்து விழிப்புணர்வு நமக்கு அவசியமாகும். நமது கர்த்தர் அன்பாக இருக்கின்றார் **(1 யோவான் 4:8)**. ஆகையால் கர்த்தருடைய பிள்ளையாகிய நாமும் அவரை போலவே அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எப்படி இருக்கின்றோம்? அன்போடா? வெறுப்பும் மற்றும் கசப்போடா? என சிந்தித்து நமது சிந்தனை மற்றும் செயல்களை கர்த்தருக்கு உகந்ததாக உருவாக்குவோம். இந்த தெய்வீக முயற்சியில் கர்த்தர் நம்மை ஆசீர்வதித்து, அவரை போன்றே நம்மை அன்புள்ளவர்களாக்குவாராக! ஆமென்.

அன்புடன்,
**–ஆசிரியர்**

# வெறுப்புணர்வு

பெண்கள் பகுதி

சகோதரி : பேபி ராஜா



அன்பான சகோதரிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனது வாழ்த்துக்கள் மற்றும் தோத்திரங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த மாதம் பைபிளில் வெறுப்படைந்த சில பெண்களிடமிருந்து வெறுப்பின் விளைவுகளை பற்றி படிப்போம்.

### 1. போத்திபாரின் மனைவி

**ஆதியாகமம் 39:7,10,14**‘ ‘சிலநாள்செ ன்றபின், அவனுடைய எஜமானின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு, என்னோடே சயனி என்றாள். அவள் நித்தம் நித்தம்யோ சேப்போடேஇ ப்படிப்பே சிக்கொண்டு வந்தும், அவன் அவளுடனே சயனிக்கவும் அவளுடனே இருக்கவும்ச ம்மதிக்கவில்லை.அ வள்த ன்வீ ட்டு மனிதரைக் கூப்பிட்டு; பாருங்கள், எபிரெய மனுஷன் நம்மிடத்தில் சரசம்பண்ணும்படிக்கு அவனை நமக்குள் கொண்டுவந்தார். அவன் என்னோடே சயனிக்கும்படி என்னிடத்தில்வ ந்தான்;ந ான்மி குந்தச த்தமிட்டுக் கூப்பிட்டேன்.”

போத்திபாரின் மனைவி, இவள் பெயர் சொல்லப்படவில்லை. இவளது கணவனின் பெயரால் அடையாளம் காண்பிக்கப்படுகிறாள். இவள் சமூகத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த எகிப்தியப் பெண். யோசேப்பு என்ற எபிரேய வாலிபனை பாவம் செய்ய அழைக்கின்றாள். அவன் மறுக்கவே இவள் வெறுப்படைகின்றாள். என்ன ஒரு கொடுமை பாருங்கள், அதனால், பரிசுத்தமான அந்த வாலிபன் மீது, கற்பழிப்பு முயற்சியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டி, அவனை சிறையில் அடைக்க செய்தாள். கர்த்தருக்கு பயந்த யோசேப்பு, கர்த்தரால் சிறையிலிருந்து சிம்மாசனத்திற்கு உயர்த்தப்பட்டது என்பது வரலாறு.

சகோதரிகளே, நாமும் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறவர்களிடம் இருந்து நம்மை விலக்கி வைத்துக்கொள்வோம். அவர்கள் வெறுப்பினால் நமக்கு தீங்கு செய்யலாம். கவலைபடாதீர்கள், அந்த தீமையை நன்மையாக முடியபண்ணுகின்ற கர்த்தர் நம்மோடு இருக்கின்றார். நாம் தொடர்ந்து நமது பரிசுத்த தன்மையிலே நிலைத்திருப்போம் **(ஆதியாகமம் 50:20).**

### 2. யேசபேல்

**1 ராஜாக்கள் 18:4**‘ ‘யேசபேல்க ர்த்தரின் தீர்க்கதரிசிகளைச் சங்கரக்கிறபோது, ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளைச்சே ர்த்து,அ வர்களைக்கெ பிக்கு ஐம்பது ஐம்பது பேராக ஒளித்துவைத்து, அவர்களுக்கு அப்பமும்த ண்ணீரும்கொ டுத்து,அ வர்களைப் பராமரித்து வந்தான்.”

இவள் ஒரு சீதோனிய இளவரசி, இஸ்ரவேலின் மிக மோசமான அரசர்களில் ஒருவரான ஆகாபின் மனைவி, மழையையும் செழிப்பையும் தருபவராகக் கூறப்பட்ட பாகாலை வணங்கினாள். இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகளை பாகாலை வணங்கும்படி கட்டாய மதமாற்றம் செய்தாள். அதற்கு ஒத்துழைக்காத, அதாவது பாகாலை வணங்காத இஸ்ரவேலின் தீர்க்கதரிசிகள் மீது வெறுப்புக்கொண்டு, அவர்களை

## சிறுவர்க்கான கேள்விகள்

1. இஸ்ரவேலர்கள் எதனை வெறுத்தனர்?
2. யோசேப்பினை வெறுத்த சகோதரர்கள் என்ன ஆனார்கள்?
3. காயீன் வெறுப்பினால் செய்த பாவம் என்ன?
4. ஆமானின் வெறுப்பு அவனை என்ன செய்தது?
5. நாம் யாரையும் வெறுக்கலாமா?

கொன்று குவித்தாள். ஆனால் இறுதியில், இஸ்ரவேலின் ஜெயபெலமானவரால், அவரது தீர்க்கதரிசியாக எலியாவின் மூலமாய் வெட்கப்படுத்தப்பட்டாள் மற்றும் அவள் கடவுளாக நம்பின விக்கிரகத்தினாலே கேலிக்கூத்து ஆக்கபட்டாள். இந்தப் பொல்லாத ராணி மிகவும் மோசமான முறையில் மரித்து, அடக்கம் செய்யப்படாமல், அவளது பிரேதம் நாய்களுக்கு இரையானது என்பது வரலாறு.

சகோதரிகளே, இஸ்ரவேலின் அரசியான யேசபேல் மிகவும் மோசமான முறையில் அழிந்துப்போனதற்கு காரணம் அவளது வெறுப்பே. அவள் வெறுப்பினால் மற்றவர்கள் அழிந்துபோவார்கள் என எண்ணினாள், ஆனால், உண்மையில் அவளது வெறுப்பு அவளையே அழித்துவிட்டது. ஏனெனில் வெறுப்பு என்பது ஒரு தீய குணம். அதனை விதைத்தால் அது எப்படி நன்மை பயக்கும். அது தீமையை மற்றும் கொடுமையை தான் உண்டாக்கும். ஆகையால் வெறுப்பின் ஆவியோடு இருக்கின்ற பெண்களாக இராமல், அன்பினாலே மன்னிக்கின்ற, தாங்குகின்ற பெண்களாக இருப்போம். வெறுப்பு அல்ல நமது நற்குணமே அநேகர் இரட்சிப்பை நோக்கி வர உந்தும்,

**1 பேதுரு 3:1,2** "அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப்பு ருஷர்களுக்குக்கீ ழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்."

தனது பாவத்தினை கண்டித்த, யோவான் திருமுழுக்கினரின் மீது வெறுப்படைந்த ஏரோதியாள். கர்த்தருடைய சமூகத்தில் மகிழ்ந்த தன் கணவனிடம் வெறுப்புக்கொண்ட மீகாள் என நிறைய பெண்களை பற்றி நாம் பைபிளிலிருந்து படிக்க முடியும். நாம் செய்ய வேண்டியது ஒன்று தான், ஆண்டவர் இயேசுவினை போல எல்லாரிடமும் அன்புள்ளவர்களாக இருந்து, தேவ சித்தம் நிறைவேற்றுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.


## Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 7.00 - 7.15 a.m (TAMILNADU Contact Mobile : *92 4421 4421 & 92 4431 4431)* ***Nambikai TV :*** *Every Sunday 3.30 p.m.* ***Salvation TV :*** *Every Sunday 2.00 p.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel. (KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel.

# வெறுப்பும், கசப்பும்

பிரியமான சகோதரிகளுக்கு அன்பின் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இத்தலைப்பை வாசிக்கும்போதே நம் முகநாடி வேறுபடும். ஏன் என்றால், இந்த குணம் இருக்கும் யாரையுமே யாருக்கும் பிடிக்காது, அப்படித்தானே? என் அன்பு சகோதரிகளே! அப்படியென்றால் நாம் ஒரு விஷயத்தை யோசித்துப்பார்ப்போம்; இந்த குணம் எனக்குள் இருந்தால் என்னையும் பிறருக்கு பிடிக்காமல் போய்விடும். எனவே, இந்த குணம் என்னிடம் இல்லாமல் நான் பார்த்துக்கொள்ள வேண்டும். வேதாகமத்தின் துணையோடே இக்குணங்களை மாற்றிக் கொள்ள நாம் வழிகளை தேடலாம். நம்முடைய தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மோடு இருந்து, நமக்கு கட்டாயம் உதவி செய்வார்.

உதாரணத்திற்கு ரெபேக்காள், ரூத், அன்னாள் போன்றவர்களை குறித்து நாம் பார்ப்போம். ஆபிரகாமின் மகனாகிய ஈசாக்கிற்கு, வேலைக்காரன் பெண், தேட சென்றபோது ரெபேக்காள் என்ற பெண் தாகமாய் இருந்த அவருக்கும் தண்ணீர் கொடுத்தாள். இது என்ன பெரிய விஷயமா? என்று நாம் யோசிக்கலாம். ஆம்! அன்பானவர்களே, நமக்கும் நம் குடும்பத்திற்கு மட்டும் என்ற எண்ணத்தோடே வாழும் மக்கள் நடுவே முகம் தெரியாத ஒருவருக்கும் அவரின் உடைமைகளுக்கு முகம் கோணாமல் உதவி செய்தவள் இந்த ரெபேக்காள் (ஆதி. 24:14-67). அவளைப் பற்றி நாம் வாசித்து தெரிந்துகொள்ளலாம் (ஆதி. 24:16). அந்த பெண் மகாரூபவதி என்று வேதத்தில் சொல்லியுள்ளது. இருப்பினும், வெளி தோற்றம் மட்டுமல்ல, உதவி செய்கிறவளாய் இருந்தாள். அதனாலே அவள் கர்த்தரிடம் ஆசீர்வாதம் பெற்றாள். அந்த ரெபேக்காளின் மகனாகிய யாக்கோபின் சந்ததியிலே இயேசு பிறந்தார்.

அடுத்தது, ரூத் தன் இளவயதிலேயே தன் கணவனை இழந்த இவள். தன் மாமியாரை தனியே விட்டு செல்ல மனதில்லாமல், தன் சந்தோஷத்தை பெரிதாக எண்ணாமல், அதற்கு வாய்ப்பு இருந்தபோது தன் மாமியோடு அவர்களுக்கு உதவியாக இருப்பதே பெரிதாக எண்ணி தன் வாழ்வை ஒப்புக்கொடுத்தாள் (ரூத். 1:15,16,17,18). பொதுவாக நாம் வாழும் உலகில் இது அரிய ஒன்றே! அப்படியே என்றாலும் மாமியார், மருமகள் என்று வரும்போது அவர்களுக்கு செய்யப்படும் காரியம் வெறுப்போடும், கசப்போடும் வேறுவழி இல்லாமல் சில வேளைகளில் செய்யப்படலாம். ஆனால் ரூத் அப்படி நடந்துக் கொள்ளவில்லை என்று புத்தகத்தை வாசிக்கும் போது தெரிந்தும் கொள்ளலாம். அவள் ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ரூத்-போவாசின் சந்ததியிலே இயேசு பிறந்தார்.

இதுபோலவே அன்னாள் (I சாமு1:10-18). இவளுக்கோ பிள்ளை இல்லை எனவே மிகவும் வேதனையோடே இருந்தாள். ஆனால் தன் வேதனையை மனிதர்களிடம் காட்டாமல் யாரிடமும் தன் வெறுப்பையும், கசப்பையும் வெளிப்படுத்தாமல், ஆண்டவரின் பாதத்தில் ஊற்றிவிட்டாள். அதனாலே தேவன் அவளை ஆசீர்வதித்தார். அவளிடத்தில் பிறந்த குழந்தையின் பெயர் சாமுவேல். இவன் ஒரு தீர்க்கதரிசி.

ஆம் பிரியமானவர்களே! இதைப் போலவே பல பெண்கள் வேதாகமத்தில் இருக்கின்றனர். தங்கள் வாழ்வின் கஷ்டத்தினாலும், துன்பத்தினாலும் அவர்களின் சூழ்நிலையினாலும் வெறுப்பையும், கசப்பையும் மட்டுமே பிறரிடம் வெளிப்படுத்த வேண்டிய நிலையில் இருந்தாலும், அவர்கள் தேவனுக்கு பயந்தவர்களாய் இருந்ததினால் அப்படி இல்லாமல் மாறாக குணசாலியாக தங்கள் குணத்தை பிரதிபலித்தார்கள். எனவே தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்.

எனவே நாமும், நீதி: 31:10-31 குறிப்பிடப்பட்ட பெண்ணைப் போல வாழ தேவனுக்குள் முயற்சி எடுப்போம். நமக்குள் இருக்கும் வெறுப்பையும், கசப்பையும் ஒளித்துவிட்டு, வேதாகமத்து பெண்களின் குணத்தை நமக்குள் வளர்த்துக் கொள்வோம். தேவன் நம்மையும் நம் தலைமுறையையும் ஆசீர்வதிப்பார்!

அன்பு சகோதரி

**- பெவர்லி லீதியாள்**

# சவுல் ராஜாவின் வெறுப்பு

அன்பான வாலிப சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம், சவுல் ராஜாவிடமிருந்து நாம், தவிர்க்க வேண்டிய ஒரு குணாதிசயத்தைப் பார்ப்போம்.

சவுல், இஸ்ரவேலின் விருப்பத்தின் பேரில் ஏற்படுத்தப்பட்ட முதல் ராஜா. தாவீது, கர்த்தருடைய விருப்பத்தின் பேரில் ஏற்படுத்தப்பட்ட ராஜா. சவுலின் ஆரம்பம் நன்றாகத்தான் இருந்தது. சிறப்பாக ராஜ்யபாரம் துவங்கப்பட்டது. தன்னை பேலியாளின் மக்கள் அற்பமாக பார்த்த பொழுதும், அவர்கள் வார்த்தைக்கு செவிகொடாமல் செயலில் காட்டினவன். ஆனாலும் அவன் வீழ்ந்து போனான். ஏன் என்று பார்த்தால், தனக்குள்ளாகப் பற்றி எறிந்து கொண்டிருந்த வெறுப்பு என்கின்ற கர்த்தர் வெறுக்கும் குணமே காரணம்.

## பொறுப்பை மறந்து, வெறுப்பை உமிழ்ந்தான்

சவுலின் வேலை என்னவோ ராஜா என்கின்ற பொறுப்புதான். ஆனால் அதை விட்டுவிட்டு, தீர்க்கதரிசி செய்ய வேண்டிய வேலையை பலிகொடுக்கும் வேலையை செய்தான். கர்த்தருக்கு முந்தி ஓட முடிவெடுத்தான் (I சாமு 13:1–14). தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை விட்டுவிட்டு, காப்பாற்ற வேண்டிய இடத்திலிருக்க வேண்டிய சவுல், தாவீதை கொல்லும்படி திட்டம் தீட்டுகிறான். தனக்குப் பின் தன் மகனே ராஜாவாக வேண்டும்; தாவீது ராஜாவாகவே கூடாது என்று முற்றிலும் வெறுப்பை வெளிப்படுத்தினான். மதியீனமாக செயல்பட்டான். நிறைய இடங்களில் உணர்ச்சி வசப்படுகிற ஒரு நபராகவும் இந்த சவுலைப் பார்க்க முடிகிறது. தான் செய்த பாவத்திற்கு ஏற்ற மனஸ்தாபம் சவுலுக்கு வரவில்லை. ஒப்பனைக்கு சாமுவேலிடம் தான் பாவம் செய்ததாக கூறினாலும் ஜனங்கள் மத்தியிலும் மூப்பர்கள் மத்தியிலும் வந்து என்னை கனம்பண்ணும் என்று சொல்வதில் குறியாக இருந்தான் (I சாமு 15:12–35).


இந்த சவுல் நிறைய இடங்களில் தவறினவராக, பொறுப்பை விட்டவராக, பாவம் செய்து, சிந்தனையற்றவராக இருந்ததால், அதிகமான வெறுப்பு நிறைந்த ஒருவராகவே இவரை பார்க்க முடிகின்றது.

ஆம் பிரியமானவர்களே! வெறுப்பு என்கின்ற குணம் நாம் செய்ய வேண்டிய பொறுப்பை செய்யவிடாமல் செய்கிறது. கர்த்தருக்காக வாழ்வதும், கர்த்தருக்கென்று காரியங்கள் செய்வதும் நம்முடைய தலையாய பொறுப்பாகும். நிறைய வேலைகளில் வாலிப வயதில் செய்கின்ற சில பாவ சம்பாஷனைகள் பாவமாகவே தெரிவதில்லை. அவற்றை நம்மைவிட்டு களைந்து போடுவோம். உதாரணமாக : புகைபிடித்தல், தகாத சிநேகம், மதுப்பழக்கம், மோசமான விஷயங்களை TV, Video மூலம் பார்ப்பது. இதெல்லாம் நம்மை வெறுப்பு நிறைந்தவர்களாக மாற்றிவிடும். வாழ்க்கையில் எதிலும் நாட்ட மற்றவர்களாக ஏனோதானோ என்ற ஒரு வாழ்க்கை வாழ்ந்து, சிற்றின்பத்தை நாடித்தேடி, கடைசியில் வெறுப்பினால் முடிக்கிறோம். இவற்றை நம்மை விட்டு முற்றும் அகற்றுவோம். சவுலின் வெறுப்பு, அவன் ராஜ ஸ்தானத்தை விலையாக கேட்டது. எனவே கர்த்தர் நமக்கென்று வைத்திருக்கின்ற ஆசீர்வாதத்தை, நம் வெறுப்பினால் தவறவிடாமல், பெற்றுக்கொள்ள முன் செல்லுவோம்.

– உங்கள் அண்ணன்
**JP**

# இஸ்ரவேலர்களின் வெறுப்பு





கடவுளுக்கு பிரியமான செல்லங்களா, உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நன்றாகயிருக்கிறீர்களா?

இப்பொழுதுகூட இஸ்ரவேலர்களின் வெறுப்பை பற்றி பைபிளில் இருந்து ஒரு சம்பவத்தை கற்றுக் கொள்ளலாமா?

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் 430 வருடம் அடிமையாக இருந்தார்கள், பார்வோன் அவர்களை மிகவும் கொடுமைபடுத்தினான். உணவு சாப்பிடக்கூட அவர்களுக்கு நேரம் கொடுக்கவில்லை, தேவனை நோக்கி அழுது, நாங்கள் உங்களை ஆராதிக்கக் கூட முடியவில்லை, மிகவும் கொடுமை அனுபவிக்கிறோம் என்று விண்ணப்பம் பண்ணினார்கள். கர்த்தர் விண்ணப்பத்தை கேட்டு, மோசேயை அனுப்பி அவர்களை விடுதலையாக்கி, வனாந்திர வழியாய் கானானுக்குள் போக வழிநடத்தினார்.

ஆனால் ஒவ்வொரு முறையும் இஸ்ரவேல் மக்கள் கடவுளையும், அவர் செய்யும் நன்மையையும் குறித்து வெறுத்து குறை கூறினார்கள். நாங்கள் வனாந்திரத்தில் இருக்கின்றோம். எங்களுக்கு தண்ணீர் மற்றும் உணவு கேட்டார்கள். வானத்திலிருந்து மன்னாவை அனுப்பினார், கர்த்தர் கொடுத்த அந்த உணவையும் அவர்கள் வெறுத்து குறை கூறினார்கள். நாங்கள் எகிப்திலேயே இருந்திருந்தால் அப்படியிருந்திருப்போம், இப்படியிருந்திருப்போம் என்று, கர்த்தர் கொடுத்ததற்கு நன்றி சொல்லாமல், கர்த்தர் கொடுத்ததை வெறுத்தார்கள். அதனால் வனாந்திரத்தில் அநேகர் செத்து விழுந்தார்கள். கடவுள் அவர்களை தண்டித்தார்.

கடவுளுக்கு பிரியமான பிள்ளைகளா! நீங்களும் உங்கள் அம்மா கொடுக்கும் உணவு நன்றாகயில்லை என்று வெறுக்கிறீர்களா? படிப்பை வெறுக்கிறீர்களா? பைபிள் படிக்கிறதில் வெறுப்பை காட்டுகிறீர்களா? உங்கள் வீட்டுல வேலை செய்ய வெறுப்பாக இருக்கிறதா? ஜெபிக்க வெறுப்பாக இருக்கிறதா? ஆசையாய் செய்ய முடியலையா? கர்த்தர் உங்களை கவனித்துக்கொண்டிருக்கிறார். நல்லவைகள் எல்லாவற்றையும் நேசித்து ஆசையாய் செய்ய வேண்டும். அப்படி செய்யும்போது கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார். செய்வீர்களா?

**மனப்பாட வசனம் : நீதிமொழி 5:12** “ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம் பண்ணினதே!”

**– அன்பு ஏசுதாஸ்**

# யோசேப்பின் மீது வெறுப்பு



ஹாய் குட்டீஸ் ! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். யாக்கோபு என்பவருக்கு 12 பிள்ளைகள் இருந்தார்கள். அவருடைய 11வது மகன் பெயர் யோசேப்பு இவன்மீது யாக்கோபு அதிகமான அன்பு வைத்தப்படியினாலே அவனுக்கு மட்டும் பலவர்ணங்கள் நிறைந்த அங்கியை செய்து போட்டார். அதினாலே அவனுடைய சகோதரர்கள் அவன்மேல் பொறாமைகொண்டு, அவனை பகைத்தார்கள். இந்த யோசேப்பு தன் சகோதரர்களோடு சேர்ந்து ஆடுகளை மேய்த்துக் கொண்டு வந்தான். அதுமட்டுமல்லாமல் தன் சகோதரர்கள் செய்யும் துன்மார்க்கமான செயல்களையும் தன் தகப்பனுக்கு அறிவித்து வந்தான்.

ஒருமுறை அவன் சகோதரர்கள் தங்கள் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக்



கொண்டிருந்தார்கள். அதனால் யாக்கோபு தன் அன்பு மகனாகிய யோசேப்பை அனுப்பி நீ போய் உன் சகோதரர்களையும் ஆடுகளையும் பார்த்து நலம் விசாரித்துவிட்டுவா என்று சொல்லி அனுப்பினான் அவன் வருகிறதை தூரத்தில் கண்ட அவன் சகோதரர்கள் அவனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார்கள். அவன் அவர்கள் அருகில் வந்தவுடனே அவன் பலவருண மேலங்கியை கழற்றி ஒரு குழியில் அவனை தூக்கியெறிந்தார்கள். பிறகு, எகிப்து தேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்த வியாபாரிகளிடத்தில் 20 வெள்ளிக்காசுக்கு விற்றும் போட்டார்கள். அந்த வியாபாரிகள் அவனை எகிப்து தேசத்திற்கு கொண்டுப் போனார்கள். அங்கே அவர்கள் அவனை போத்திபார் என்பவனுக்கு அடிமையாக விற்றார்கள்.

இங்கே தகப்பன் தங்கள் சகோதரனைப் பற்றி விசாரிப்பாரே என்று எண்ணி ஒரு வெள்ளாட்டுக்கடாவை அடித்து அதன் இரத்தத்தை யோசேப்பின் மேலங்கியில் தோய்த்தார்கள். அதை அவர்கள் தகப்பனிடத்தில் காட்டி யோசேப்பை ஒரு துஷ்டமிருகம் கொன்று போட்டது என்று சொன்னார்கள்.

பார்த்தீர்களா குட்டீஸ்! யோசேப்பின் மீது அவன் சகோதரர்களுக்கு வந்த பொறாமை, பகை எண்ணும் குணங்கள் அவனை கொலைச் செய்து அடிமையாக விற்றுப்போடும் அளவிற்கு கொண்டு சென்றது. ஒரு வேலை நமக்கும் இந்த பொறாமை அல்லது பகைமை உணர்வு யார்மீதாவது இருந்தால் யோசேப்பின் மற்ற சகோதரர்களை போல நம்மை பாவஞ்செய்ய வைக்கும். அதனால் இன்றைக்கு தேவனிடத்தில் (ஜெபத்தில்) மன்னிப்புக்கேட்டு அந்த குணத்தை / உணர்வை விட்டுவிட்டு தேவ ஆசீர்வாதம் பெறலாம்.

**மனப்பாட வசனம் : *ஓசியா 4:6*** “நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; ஆகையல் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.

**– குயினி பிரதீப்**

# காயீனின் வெறுப்பு



அன்பான மழலை செல்லங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் இந்த அக்காவின் அன்பின் வாழ்த்துக்கள்.

இந்த மாதம் நாம் காயீன் அண்ணனிடமிருந்த ஒரு தவறான பழக்கத்தினை குறித்து படிக்கலாமா?

இந்த வரலாற்று நிகழ்ச்சி ஏறக்குறைய 6000 ஆண்டுகளுக்கு முந்தி நடந்தது. இந்த உலகத்திலே பிறந்த முதல் குழந்தை தான் இந்த காயீன் அண்ணன். அவருடைய அம்மா ஏவாளும், அப்பா ஆதாமும் கடவுளால் படைக்கப்பட்டவர்களாக இருந்தனர். இந்த உலகத்தின் முதல் குழந்தை, எப்படி ஒரு ஆசீர்வாதமான பிள்ளை பார்த்தீங்களா? அவருக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் பெயர் ஆபேல். அவர் ஆடு மேய்க்கின்ற வேலை பார்த்தார். காயீனோ விவசாயம் செய்தார்.

ஒரு நாள் இருவரும் கர்த்தருக்கு பலி கொடுக்க சென்றனர். பலி கொடுக்கனும்னா என்ன செய்யனும். ஏதாவது ஆடு, மாடு தானே கொண்டு



செல்லனும். ஆபேல் அண்ணன் தேவனுக்கு பிடித்த ஆடு கொண்டு வந்தார். ஆனால், காயீன் அண்ணன் தானியங்களில் தனக்கு பிடித்ததை கொண்டு வந்தார். அது தப்புதானே? அதனாலே தான் கர்த்தர் அவர் கொடுத்த பலியை ஏற்கவில்லை. ஆனால், ஆபேல் அண்ணன் கொடுத்த பலியை ஏற்றுக்கொண்டார்.

ஆனாலும், பாருங்க, காயீன் அண்ணன் தான் செஞ்ச தப்ப நினைக்காமல், ஆபேல் அண்ணன் மேல வெறுப்படைஞ்சார். அது தப்பு அப்படி வெறுக்கவும், எரிச்சலாகவும் கூடாதுனு கர்த்தர் சொன்னார். அப்ப சரி சரினு கேட்டுட்டு, பிறகு ஒருநாளில் காயீன் அண்ணன் தான் கூட பிறந்த தம்பினு கூட பார்க்காமல், கொஞ்சம் கூட இரக்கம் இல்லாமல், ஆபேலை கொன்று போட்டார். மேலும், அதனை பற்றி விசாரிக்க வந்த கர்த்தரிடம் நாடகமாடினார். சாபம் பெற்றார்.

செல்ல குழந்தைகளே, கவனித்தீர்களா? வெறுப்பு எவ்வளவு பெரிய பாவங்களை செய்ய வைக்கின்ற பாவமாக இருக்கின்றது. அதனால் தான் பைபிள் நம்மை அன்புள்ளவர்களா இருக்கச் சொல்கின்றது. நீங்க இருப்பீங்க தானே?

**மனப்பாட வசனம் : எபேசியர் 4:31** "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்றெ ந்தத்து ர்க்குணமும்உ ங்களைவி ட்டு நீங்கக்கடவது."

**– பிரியா ஆண்டனி**

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

## பொதுவான செய்திகள்

### சித்த மருத்துவம்

சித்த மருத்துவம் என்பது தென்னிந்திய தமிழ் மருத்துவ முறையாகும். பண்டையச் சித்தர்கள். இதனை உருவாக்கித் தந்துள்ளார்கள்.

சித்தர்கள் தங்கள் ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து மிகவும் துல்லியமாகக் கூறியுள்ளனர்.

இயற்கையில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற புல், பூண்டு, மரம், செடி, கொடி, வேர், பட்டை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம், வித்து முதலிய மூலிகைப் பொருட்களைக் கொண்டும், நவரத்தினம், நவலோகங்கள், இரசம், கந்தகம், கற்பூரம், தாரம், அயம், பவளம் முதலிய தாதுப்பொருட்களைக் கொண்டும், சங்கு, பலகறை, நண்டு முதலிய சீவப் பொருட்களைக் கொண்டும், திரிகடுகு, திரிசாதி, திரிபலை, பஸ்பம், செந்தூரம், மாத்திரை, கட்டுகள், பொடிகள், குளித்தைலங்கள், கஷாயங்கள் முதலிய பல பிரிவு வகைகளாக வியாதிகளுக்கு நல்ல தண்ணீர், கடல்நீர், ஊற்று நீர், கிணற்று நீர், முதலிய பல நீர் வகைகளைக் கொண்டும், பால், தேன், சீனி, நெய் முதலியன கொண்டும், தெங்கு, புங்கு, புன்னை, வேம்பு, எள் முதலிய தாவர எண்ணெய் வகைகளைக் கொண்டும் உருவாக்கப்பட்ட ஒரு மருத்துவ முறையாகும்.

நாம் உண்ணும் உணவே உயிர் உடலிலிருக்க செய்யும் மருந்தாகும். அவரவர் தேகத்திற்குப் பொருந்தாத மற்றும் முறையில்லாமல் உண்பதனாலும் நோய்கள் உற்பத்தியாகின்றன.

# ஆமானின் வெறுப்பு

ஹாய் செல்லக்குட்டீஸ் ! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் அக்காவின் வாழ்த்துக்கள். நன்றாக படியுங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கின்றோம்.

இந்த மாதம் நம்மிடம், ஆமான் என்பவரிடமிருந்து இருக்ககூடாத ஒரு குணத்தினை பற்றி படிக்கலாமா?

அகாஸ்வேரு மன்னன் உலகத்தினை ஆண்ட நாட்களில், அவரது அரசவையில் மிகவும் கணம் பொருந்தியவராக ஆமான் என்ற மந்திரி இருந்தார். அவரை பார்த்து எல்லாரும் மரியாதை கொடுப்பார்கள். வணக்கம் சொல்லுவார்கள், நமக்கு புரியுற மாதிரி சொல்லனும்னா, கையெடுத்து கும்பிட்டு வணக்கம் சொல்வார்கள். அதனால் மிகவும் ஆணவமிக்கவராக அவர் நடந்து கொண்டார். ஆயினும், அந்த அரசவையில் மொர்தெகாய் என்னும் யூதன் ஒருவர் இருந்தார். இந்த மொர்தெகாய் கர்த்தருக்கு பயந்து நடப்பவராக இருந்தார். அதனால் அவருக்கு ஆமான் நடந்துகொள்வதில் விருப்பமற்று, ஆமானை பார்த்து கையெடுத்து கும்பிடமாட்டார்.

இதனால், ஆமானிற்கு மொர்தெகாயின் மீதும், மற்றும் ஒட்டுமொத்த யூதர்கள் மீதும் பயங்கரமான வெறுப்பு வந்தது. அதனால் அவர்கள் அனைவரையும் அழிக்க சதித்திட்டம் செய்தார். மேலும், மொர்தெகயினை கொல்ல 50 முழு உயரத்தில் தூக்குமரம் ஒன்றும் செய்துவைத்தார். என்ன ஒரு வெறுப்பு பாருங்கள்! அந்த நாட்களில் மொர்தெகாயின் வளர்ப்பு மகளான யூத பெண் எஸ்தர் பேரரசியாக, அகாஸ்வேருவின் மனைவியாக அங்கே இருந்தாள்.

இந்த ஆமான், பேரரசர் அகாஸ்வேருவிடம் யூதர்களை பற்றி மோசமாக பொய் சொன்னார். அவர்கள் அரசருக்கு விரோதமாக கலகம் செய்வதாகவும், அவர் அரசருக்கு விரோதமானவர்கள் அவர்கள் உயிரோடிருக்க கூடாது, ஆகையால் அரசர் உத்தரவிட்டால், அந்த சிறுகூட்டத்தினை அழித்துவிடலாம் என



ஆலோசனை சொன்னார். அரசரும் ஆமானின் வெறுப்பான சதிதிட்டத்தினை அறியாமல் ஒத்துக்கொண்டு, ஆணையிட்டார். ஆயினும் இறுதியில் ஆமானின் வெறுப்பு அவரைத் தான் அழித்தது. ஆமான் செய்த தூக்கு மரத்திலே அவரே தூக்கிலிடப்பட்டார். அவர் செய்த சதியில் அவரே சிக்கிக்கொண்டார்.

குட்டீஸ், நாமும் யார் மீதும் வெறுப்பு கொண்டு நடக்க கூடாது. ஏனெனில் வெறுப்பு நாம் வெறுப்பவர்களை அல்ல, நம்மையே அழித்துவிடும். ஆகையால் அன்புள்ளவர்களாக இருந்து அன்போடு நடப்போம்.

**மனப்பாட வசனம் : எபேசியர் 5:2** "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள்."

**இம்மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாளைக் காணும் வாசகர்கள் அனைவருக்கும் கிருபையுள்ள வார்த்தை ஆசிரியர் குழுவின் சார்பாக வாழ்த்துக்களும், ஜெபங்களும் !**

## ஜூலை மாத கேள்விகள்

1. கர்த்தர் வெறுக்காதவனை நான் வெறுப்பது எப்படி என்றது யார்?
2. காயீன் வெறுப்பினால் என்ன செய்தான்?
3. நோவா வெறுப்பினால் என்ன செய்தார்?
4. யூதர்கள் ஏன் பொய் சொன்னார்கள், பொய் சொல்ல சொன்னார்கள்?
5. சகல விதமான கசப்பும், துர்க்குணமும் என்ன செய்யப்பட வேண்டும்?
6. சிறையிலிருந்து சிம்மாசனத்திற்கு உயர்த்தப்பட்டவர் யார்?
7. யேசபேலின் வெறுப்பு அவளை என்ன செய்தது?
8. இஸ்ரவேல் ஜனங்கள் எதனை மனதிற்கு வெறுப்பாயிருக்கிறது என்றனர்?
9. நாம் யாரை போல அன்பிலே நடந்துகொள்ள வேண்டும்?
10. எதனை வெறுத்து எதனை பற்றிக்கொள்ள வேண்டும்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 5-08-2022**

**அனுப்ப வேண்டிய முகவரி : சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழ் பதில்கள்

1. எபேசியர் 5:17
2. I பேதுரு 2:15
3. I தீமோத்தேயு 2:4
4. I தெசலோனி 5:18
5. I தெசலோனி 4:3
6. நீதிமொழிகள் 10:25
7. I யோவான் 2:17
8. மத்தேயு 12:50
9. மத்தேயு 7:21
10. அப்போஸ்தலர் 9:6

### சென்ற இதழ் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. B. ஜாய்ஸ் ஜோசுவா – வெள்ளறம்
2. Mrs. ஜெனி – கரூர்
3. Mr. டேவிட் சாந்தகுமார் – வல்லம்
4. S. பாக்கியராஜம் – மதுரை
5. Mrs. சாந்தி ஜோயல் – திருச்சி
6. G. பீற்றர் பால்ராஜ் – ஆறுமுகநேரி
7. Mrs. ஹெலன் திலக் – தூத்துக்குடி
8. R. நாகலிங்கம் சித்ரா – திருச்சி
9. Mr. சூசைமரியான் – சென்னை
10. Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் – நெல்லை
11. C. வைலட் கிறிஸ்டோபர் – தளவாய்புரம்
12. Mrs. ஜெபசீலி ஜெயக்கொடி – திருச்சி
13. Mrs. D.I. அன்பு சுதந்திரம் – ஏர்வாடி
14. J. விஜய் – மதுரை
15. J. ஜான்சி – ஆனைமலை
16. Mrs. P. சமாதானம் பீட்டர் – விருதுநகர்
17. Mrs. சாந்தி வில்லியம் – புதுக்கோட்டை
18. A. டேவிட் ஜெயச்சந்திரன் – மதுரை
19. Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் – தூத்துக்குடி
20. Mrs. R.P. டேவிட் – ஏற்காடு
21. Mrs. ஜெயசுதா பொன்செல்வி – சென்னை
22. A. ரோஸ்மேரி – சென்னை
23. Mrs. ஹெப்ஸிபா தாமஸ் – படப்பை
24. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு – செங்கல்பட்டு
25. G. ஏஞ்சலம்மாள் – மதுரை
26. Mrs. D. மீனாள் – மூலனூர்
27. Mrs. தெல்மா ஸ்டான்லி – மதுரை
28. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் – சேலம்
29. Mrs. காந்தா மனோகரன் – திருச்சி
30. D. அலெக்ஸாண்டர் சாமுவேல் – சென்னை
31. Mrs. பெரில் பாஸ்கர் – படப்பை
32. A.G. சாமுவேல் – தூத்துக்குடி
33. S. அசோக்குமார் பிரின்ஸ் – தூத்துக்குடி
34. Mrs. மேரிராஜ் – மதுரை
35. R. சரோஜா – தென்கலம்
36. A. ஆனந்த கதிரோன் – சென்னை
37. Mrs. விமலா ஜெபராஜ் – சென்னை
38. Mrs. லீலா ஜோசப் – கோவை
39. A. டேவிட் விஸ்வநாதன் – கோவை
40. Mrs. இந்திரா பாண்டி – திருமங்கலம்

Place of Publication : Arasaradi, Madurai
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at Classic Printers & Binders Madurai-2 ✆ 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2021 - 2023
Date of Publication : 8th July 2022
Posted at Arasaradi HPO on 10th 11th July 2022


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்




அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/–மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்





## கைபிரதிகள்



உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431

## BIBLE STUDY BOOKS IN ENGLISH




AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To